முதன்மை தொழிலாளர் நீதிமன்றம் வேலூர். வேலூர் மாவட்டம்

ஐ.டி.எண்.51/2016

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08-ஆம் தேதியில் சிலம்பரசன் என்பவரது வாக்குமூலம் (1908-ஆம் ஆண்டின் சட்டம் 10-வது கட்டளை மற்றும் தொழில் தகராறு சட்டம் 1947 ஏற்பாட்டின் படி) திருமதி.A.K.நாசினி, Deputy Nazir என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 on the day of 08.10.2025.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | சிலம்பரசன் |
| 2. | தந்தை பெயர் | : | தனக்கோட்டி |
| 3. | தொழில் | : | |
| 4. | வயது | : | |
| 5. | முகவரி | : | |

**முதல் விசாரணை : -**

நிர்வாக தரப்பு சாட்சி 2 என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான். என்னுடைய அடையாள அட்டை நகல் **நி.த.சா.ஆ 3.** வசந்த் என்பவர் 08.07.2014 அன்று அளித்த புகாரின் நகல் **நி.த.சா.ஆ4.** மனுதாரர் நிர்வாகத்திற்கு எதிராக அச்சடித்து விநியோகித்த துண்டு பிரச்சாரத்தின் நகல் **நி.த.சா.ஆ5.** 18.07.2014 அன்று நிர்வாகம் மனுதாரருக்கு அளித்த குற்றச்சாட்டு குறிப்பாணை **நி.த.சா.ஆ6.** அதனை மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **நி.த.சா.ஆ7.** 10.04.2015 அன்று நிர்வாகம் மனுதாரருக்கு அளித்த காரணம் கோரும் அறிவிப்பு **நி.த.சா.ஆ8.** அதனை மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **நி.த.சா.ஆ9.** 13.04.2015 அன்று மனுதாரர் நிர்வாகத்திற்கு அளித்த கடிதம் **நி.த.சா.ஆ10.** 23.04.2015 அன்று மனுதாரர் அளித்த விளக்க கடிதத்தின் நகல் **நி.த.சா.ஆ11.** 24.04.2015 அன்று நிர்வாகம் மனுதாரருக்கு அளித்த காரணம் கோரும் அறிவிப்பு **நி.த.சா.ஆ12.** 26.04.2015 தேதியிட்ட மனுதாரரின் விளக்க கடித நகல் **நி.த.சா.ஆ13.** 07.05.2015 தேதியிட்ட பணிநீக்க உத்தரவு நகல் **நி.த.சா.ஆ 14.** மனுதாரர் அதனை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **நி.த.சா.ஆ15.** 20.02.2015 தேதியிட்ட பொது தகவல் அலுவலர், தொழிலாளர் அலுவலர் தகவல்

அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அளித்த விவரங்கள் **நி.த.சா.ஆ16**. 07.02.2012 தேதியிட்ட சுரேஷ்குமார் என்பவர் அளித்த புகார் கடிதம் **நி.த.சா.ஆ17.** மனுதாரருக்கு அளித்த குற்றப்பத்திரிகை நகல் **நி.த.சா.ஆ 18.** மனுதாரர் அளித்த விளக்கம் **நி.த.சா.ஆ19.** மனுதாரருக்கு அளிக்கப்பட்ட இறுதி ஆணை நகல் **நி.த.சா.ஆ20.** மனுதாரர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு கைப்பட எழுதிய கடிதம் **நி.த.சா.ஆ21.** மனுதாரருக்கு அளித்த எச்சரிக்கை கடிதம் **நி.த.சா.ஆ22.** திரு. கந்தசாமி மற்றும் மேலாளர் சுகுமார் ஆகியோர் அளித்த புகார் கடிதங்களின் நகல்கள் முறையே **நி.த.சா.ஆ23** மற்றும் **நி.த.சா.ஆ 24**. மனுதாரருக்கு அளித்த குற்றப்பத்திரிகை நகல் **நி.த.சா.ஆ25.** மனுதாரர் அளித்த விளக்க கடிதம் **நி.த.சா.ஆ26.** மனுதாரருக்கு அளிக்கப்பட்ட தற்காலிக பணியிடை நீக்க உத்தரவு நகல் **நி.த.சா.ஆ27**. மனுதாரருக்கு அளித்த காரணம் கோரும் அறிவிப்பு மற்றும் அதனை அவர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை முறையே **நி.த.சா.ஆ28** மற்றும் **நி.த.சா.ஆ29.** மனுதாரரின் உள்துறை விசாரணைக்கான அறிவிப்பு நகல் **நி.த.சா.ஆ30.** அதனை அவர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **நி.த.சா.ஆ 31.** மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைகள் **நி.த.சா.ஆ32.** உள்துறை விசாரணை அதிகாரிகளின் முறிவு அறிக்கை நகல் **நி.த.சா.ஆ33.** மனுதாரருக்கு அளிக்கப்பட்ட காரணம் கோரும் அறிவிப்பு மற்றும் அதனை அவர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை முறையே **நி.த.சா.ஆ 34** மற்றும் **நி.த.சா.ஆ35.** மனுதாரர் குற்றத்தை ஒப்புக்கொண்டு கைப்பட எழுதிய விளக்க கடித நகல் **நி.த.சா.ஆ36.** மனுதாரருக்கு அளிக்கப்பட்ட இறுதி ஆணை **நி.த.சா.ஆ37.** அதனை அவர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **நி.த.சா.ஆ38.**

(**நி.த.சா.ஆ 17 முதல் 38 வரை** மனுதாரர் தரப்பு ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்பட்டது).

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2025.10.08 14:50:51 +0530